இந்து சமய அறநிலையத்துறை

அனுப்புநர்

ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப.,
ஆணையர்
சென்னை–34

பெறுநர்

1. அனைத்து இணை ஆணையர்கள்
2. அனைத்து இணை ஆணையர்/ செயல் அலுவலர்கள்
3. அனைத்து துணை ஆணையர்/ செயல் அலுவலர்கள்
4. அனைத்து உதவி ஆணையர்கள்
5. அனைத்து உதவி ஆணையர்/ செயல் அலுவலர்கள்

சுற்றறிக்கை ந.க.எண்.31154/2010/எம்.3/ நாள்.19.08.2021

அய்யா/அம்மையீர்,

பொருள்: அறநிறுவனங்களுக்கு சொந்தமான அசையாச் சொத்துக்களுக்கு கேட்பு, வசூல், நிலுவை விவரங்கள் கணினியில் பதிவேற்றம் செய்தல் அறிவுரை வழங்கியது – சான்று கோருதல்– தொடர்பாக.

பார்வை: இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.31154/2010/ எம்.3/ நாள்.07.08.2021

****

பார்வையில் கண்ட சுற்றறிக்கையில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள அறநிறுவனங்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்கள் தொடர்பாக அந்தந்த அறநிறுவனங்களில் பேணப்படும் கேட்பு, வசூல், நிலுவை பதிவேட்டின் விவரங்கள் அனைத்தும் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டுமென ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், அறநிறுவனங்களில் குத்தகைதாரர்/ வாடகைதாரர்களால் செலுத்தப்படும் குத்தகை/ வாடகை தொகைக்கு அச்சடித்த இரசீது வழங்கும் முறையினை ரத்து செய்து 01.09.2021 முதல் இணையத்தள வழியில் அந்தந்த அறநிறுவனங்களின் நிர்வாகத்திற்கு குத்தகை /

Verified by RealEstate™

வாடகையினை செலுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அனைத்து சார்நிலை அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், அனைத்து அறநிறுவனங்களுக்கு சொந்தமான அசையாச் சொத்துக்களுக்கான கேட்பு, வசூல், நிலுவை குறித்த விவரங்களை விடுதல் இல்லாமல் வரும் 24.08.2021-க்குள் தவறாமல் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டுமென அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், அந்தந்த அறநிறுவனங்களில் அறங்காவலர்/ ஆய்வர்/ செயல் அலுவலர் ஆகியோர்கள் கேட்பு, வசூல், நிலுவை தொடர்பாக கணினியில் பதிவேற்றம் செய்த விவரத்திற்கு இத்துடன் இணைக்கப்பட்ட சான்றினை பூர்த்தி செய்து கையொப்பமிட்டும், பட்டியலை சேர்ந்த திருக்கோயில்களுக்கு இணை ஆணையரும் மற்றும் பட்டியலை சேராத திருக்கோயில்களுக்கு உதவி ஆணையரும் கையொப்பமிட்டு இச்சான்றினை வரும் 30.08.2021-க்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. சான்று அளிக்க தவறும் பட்சத்தில் உரிய அலுவலர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இச்சுற்றறிக்கை விவரத்தை தங்களது ஆளுகையின் கீழ் உள்ள அனைத்து அறநிறுவனங்களின் நிர்வாகிகள்/ செயல் அலுவலர்களுக்கு தெரிவித்திட வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இச்சுற்றறிக்கையினை பெற்றுக் கொண்டமைக்கு உடன் ஒப்புதல் வழங்கிட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு: சான்று படிவம்

ஒம்/-ஜெ.குமரகுருபரன்
ஆணையர்

/உ.ந.உ.ப/

19.8.2021
கண்காணிப்பாளர்

19.8.2021

Verified RealEstate™

சான்று

..... மண்டலம் ..... வட்டம் .....

நகர்/ கிராமத்தில் உள்ள அருள்மிகு.....

திருக்கோயிலுக்குச் சொந்தமான அனைத்து அசையா சொத்திற்குண்டான கேட்பு, வசூல், நிலுவை விவரங்கள் குறித்தான அனைத்து பதிவுகளும் ITMS இணையதளத்தில் விடுபடாமல் பதிவேற்றம் செய்யப்பட்டுவிட்டது என சான்றளிக்கப்படுகிறது.

அறங்காவலர்/தக்கார்/ஆய்வர்/
செயல் அலுவலர்
அருள்மிகு .....
திருக்கோயில்.

(நாளுடன் கூடிய முத்திரை)

இணை ஆணையர்/
உதவி ஆணையர்
(மேலொப்பம்)

ஒம்/–ஜெ.குமரகுருபரன்
ஆணையர்

/உ.ந.உ.ப/

19.8.2021
கண்காணிப்பாளர்

19.8.2021

Verified RealEstate™